பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
27 01 2025 **MONDAY** 6 45 **AM**
வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. புதுதில்லியில் இன்று நடைபெறும் தேசிய மாணவர் படை பேரணியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.

2. விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

3. மும்பை தாக்குதல் குற்றவாளி தகவூர் ராணாவை இந்தியாவிற்கு அனுப்பி வைப்பது என்ற அமெரிக்காவின் முடிவு வரவேற்கத்தக்கது என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

4. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 34 மீனவர்களை விடுவிக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

5. மகளிர் ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் ஒடிசா அணி கோப்பையை வென்றது.

>>>>><<<<<

புதுதில்லியில் இன்று நடைபெறும் தேசிய மாணவர் படை பேரணியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.

‘இளைஞர் சக்தி, வளர்ச்சியடைந்த பாரதம்’ என்பதே இந்த ஆண்டு பேரணியின் மையக் கருத்தாகும்.

நாட்டின் வளர்ச்சியில் தேசிய மாணவர் படையின் பங்களிப்பை எடுத்துரைக்கும் விதமாக 800 மாணவர்கள் பங்கேற்கும் கலாச்சார நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

மேலும், 18 நட்பு நாடுகளைச் சேர்ந்த 144 மாணவர்களும் இந்த பேரணியில் பங்கேற்கின்றனர்.

இவர்கள் தவிர, ‘எனது இளைய பாரதம்’ குழுவைச் சேர்ந்த 650 தன்னார்வலர்களும் சிறப்பு அழைப்பாளர்களாக இந்த பேரணியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

>>>>><<<<<

குடியரசு தினத்தை ஒட்டி, நேற்று மாலை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி தேநீர் விருந்தளித்து கௌரவித்தார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் இந்தோனேஷிய அதிபர் திரு. **Prabowo Subianto**, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் உள்ளிட்ட தலைவர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த நிகழ்ச்சியில் முக்கிய பிரமுகர்களும் அரசின் வளர்ச்சித் திட்டங்களால் பலன் அடைந்த பயனாளிகளும் கலந்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

விருந்தின் போது நடைபெற்ற கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளை விருந்தினர்கள் ரசித்து மகிழ்ந்ததாகவும் குடியரசுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

**>>>>><<<<<**

விவசாயிகளுக்கு அதிகாரமளித்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்ற விவசாயிகளுடன் கலந்துரையாடிய அவர், வேளாண் சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்களை பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

புதிய தொழில்நுட்பங்கள் விவசாயிகளின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விளைநிலங்களிலிருந்து நுகர்வோருக்கு நேரடியாக விளைபொருட்களை விற்பனை செய்யும் திட்டம், விவசாயிகள் அதிக லாபம் அடைவதை உறுதி செய்யும் என்றும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

மும்பை தாக்குதல் குற்றவாளி தகவூர் ராணாவை இந்தியாவிற்கு அனுப்பி வைப்பது என்ற அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் முடிவு வரவேற்கத்தக்கது என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், இந்த வழக்கு தொடர்பாக முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு உறுதியான எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்று கூறியுள்ளார்.

ஆனால், பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்ட முயற்சிகளால் தான் தற்போது தகவூர் ராணா இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது 140 கோடி இந்திய மக்களுக்கு கிடைத்த வெற்றி என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், தீவிரவாதிகளை சட்டத்தின் முன் நிறுத்தும் திறன் இந்தியாவிற்கு உள்ளது என்பது நிருபணம் ஆகியுள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

>>>>><<<<<

இரண்டு நாள் பயணமாக வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி பெய்ஜிங் சென்றுள்ளார்.

அங்கு அவர் இருதரப்பு உறவுகள் குறித்து சீன அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

திரு. விக்ரம் மிஸ்ரியின் இந்த பயணத்தை வரவேற்றுள்ள சீனா, லடாக் எல்லையில் உள்ள **Galwan** பள்ளத்தாக்கில் இரு நாட்டு படைகளுக்கிடையே ஏற்பட்ட மோதலுக்குப் பிறகு, இருநாட்டு தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் அளவில் நடத்திய தொடர் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட முன்னேற்றமாக இந்தப் பயணம் அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளது.

சீனாவில் வசந்தகால திருவிழா மற்றும் புத்தாண்டு கொண்டாட்டம் நடைபெறும் வேளையில், வழக்கமாக ஒருவார காலத்திற்கு விடுமுறை அளிக்கப்படும் நிலையில், இந்திய வெளியுறவுத்துறை செயலரின் சீனப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

>>>>><<<<<

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 34 மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், ராமேஸ்வரத்திலிருந்து மூன்று படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 34 மீனவர்கள் தனுஷ்கோடி அருகே இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் அடிக்கடி சிறை பிடிக்கப்படும் சம்பவங்கள், மீனவர்களிடையே, அச்சத்தை ஏற்படுத்துவதோடு, அவர்களது எதிர்காலத்தை பாதிப்பதாக உள்ளது என்றும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதை தடுக்க தூதரக ரீதியாக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் திரு. மு.க.ஸ்டாலின் தமது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோர் கண்காட்சியில் பங்கேற்ற முதலீட்டாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு மாநில அமைச்சர் திரு. மதிவேந்தன் பரிசுகளை வழங்கினார்.

இந்த கண்காட்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரால் தயாரிக்கப்பட்ட 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொருட்கள், 500 அரங்குகளில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

வணிக நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள், மின் மற்றும் மின்னணுவியல், வேளாண் கருவிகள், கட்டுமான தொழில் சார்ந்த உபகரணங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் அரங்குகள் என 300 அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன.

>>>>><<<<<

மதுரை மாவட்டம், அரிட்டாபட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மற்றும் தொல்லியல் மண்டலமாக அறிவிக்க வேண்டும் என விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் நேற்று அரிட்டாபட்டி சென்ற போது, அவர்கள் இந்த கோரிக்கையை விடுத்தனர்.

(வாய்ஸ் பைட் - விவசாயிகள் 24 செகண்டஸ்)

>>>>><<<<<

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப் பிரிவு வழங்கும் ‘செய்திச்சுடர்’ நிகழ்ச்சியில், பத்மஸ்ரீ விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த சமையல் கலைஞர் செஃப் தாமோதரனுடன் எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

பெலாரஸ் அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் திரு. **Alexander Lukshenko,** 7வது முறையாக வெற்றி பெறுவார் என்று தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள் தெரிவித்துள்ளன.

>>>>><<<<<

உகாண்டாவின் **Entebbe** விமான நிலையத்திலிருந்து இஸ்தான்புல் நோக்கி புறப்பட்ட விமானம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக, அவசரமாக தரையிறக்கப்பட்டது.

>>>>><<<<<

நாட்டில் கடந்த ஒன்பது மாதங்களில் சுமார் 32 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் வரப்பெற்றுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

நாகாலாந்தில் சுகாதார சேவைகளை மக்களின் வீடுகளுக்கே சென்று வழங்குவதற்கான முதலமைச்சரின் நடமாடும் அறுவை சிகிச்சை அரங்கை அம்மாநில ஆளுநர் திரு. இல. கணேசன் தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்திற்கு உட்பட்ட **Mendhar** வனப்பகுதியில் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டின் அருகே பற்றி எரியும் காட்டுத் தீயை அணைக்கும் பணியில் வனத்துறையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

>>>>><<<<<

ஹைதராபாதில் உள்ள உசேன்சாஹர் ஏரியில் இரண்டு படகுகள் தீப்பற்றி எரிந்ததில், 3 பேர் காயமடைந்துள்ளனர்.

>>>>><<<<<

கரூர் மாவட்டம், எலவனூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் திருமதி. இந்துமதி பாலசுப்பிரமணி தனது பதவி காலத்தில், அந்த கிராமத்தில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டு பராமரித்ததற்காக குடியரசு தினவிழாவில் விருது வழங்கப்பட்டது.

>>>>><<<<<

சென்னை, திருவான்மியூர் பகுதியில் போதைப்பொருள் வைத்திருந்த இரண்டு பேரை மாநகர காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

மகளிர் ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் ஒடிசா அணி கோப்பையை வென்றது.

ராஞ்சியில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் அந்த அணி, சூர்மா அணியை 2-1 என்ற கோல்கணக்கில் வென்றது.

>>>>><<<<<

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில், நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை அணி 3-0 என்ற கோல்கணக்கில் மொஹமதன் அணியை வென்றது.

இதன் மூலம் மும்பை அணி 27 புள்ளிகளுடன் 5வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

புனேயில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli**, வைதேகி சௌத்ரி, அங்கிதா ரெய்னா ஆகியோர் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

தேசிய டேபிள் டென்னிஸ் போட்டியின் ஆடவர் பிரிவில் மனுஷ் ஷாவும், மகளிர் பிரிவில் **Diya Chitale**-வும் சாம்பியன் பட்டம் வென்றனர்.